மலர் : 10 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 6

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஏப்ரல் 2010**

| ஆண்டுசந்தா | இந்தியா ரூ.25 | வெளிநாடு ரூ.250 |
|---|---|---|

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2010 ஏப்ரல்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்.

ஏசாயா 41 : 12



கோவில்பட்டி– இலுப்பையூரணி கிராமத்தில் **பாஸ்டர் தமிழ்செல்வன்** அவர்கள் விசுவாசத்தில் கட்டிக் கொண்டிருக்கும் ஜெபவீட்டை முடிப்பதற்கு தேவைப்படும் பண உதவியை கர்த்தர் பரத்திலிருந்து சந்திக்கும்படியாக ஜெபியுங்கள்.

பார்வையிட்ட நாள் : 13.02.2010. **சகோ. ஸ்டீபன் , சகோதரி ஜெயசீலி.**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**CHIEF EXECUTIVE OFFICER Letter Dated:17.03.2010**



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தருடைய கிருபையினால் வேலூர் – அரக்கோணம் யூனியனில் **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

TVGM New Church 3 வது ஆண்டு நிறைவுவிழா சிறப்பாக நடைபெற்றது.

2010 மார்ச் 1 ம் தேதி வாக்குத்தத்த ஜெபத்தின்போது சகோ.ஜெப், சகோதரி ஜுன் அவர்கள் **THE AMBASSADOR SCHOOL OF LEARNING** பெயரை தேவனுடைய மகிமைக்காக **சகோ. டேவிட்** மற்றும் TVGM சேவையாளர்கள், சிறுவர் இல்லப் பிள்ளைகள் முன்னிலையில் பிரதிஷ்டை செய்தார்கள்.

கர்த்தருடைய கிருபையினால் 2010 மார்ச் 17ம் தேதி **TASOL Trust** – ஐ பதிவு செய்யவும், TASOL திட்டத்திற்காக அட்வான்ஸ் கொடுத்திருந்த நிலத்தின் மூன்றிலொரு பகுதியை பத்திரம் முடிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். மீதி 2 பகுதிக்குரிய பணத்தை கர்த்தர் கிருபையாக கட்டளையிட ஜெபித்து வருகிறோம்.

இந்தப் பத்திரிக்கை உங்கள் கைகளில் கிடைக்கும்பொழுது, **திருவேலங்காடு, மோசூர், பெருவளப்பூர், வடமதுரை** ஆகிய 4 இடங்களில் ஜெப வீடு பிரதிஷ்டை முடிந்திருக்குமென கர்த்தருக்குள் நம்புகிறேன்.

கர்த்தருக்குச் சித்தமானால், 2010 ஏப்ரல் 14 காலை 9 – 2 மணி முடிய கன்னியாகுமரி மாவட்டம் – **அஞ்சுகிராமத்தில் TVGM தரிசனமுகாம்** நடைபெறும். ஜெபியுங்கள். குடும்பமாக கலந்து கொள்ளுங்கள்.

2010 மே 1 ம் தேதி TVGM ஐ பொறுப்பேற்று 6 ஆண்டுகள் முடிவடைகிறது. அன்றைய துதி ஆராதனையில் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன். **சகோ. அந்தோணி** ( ஆத்தும நேசர் ) அவர்கள் சிறப்பு செய்தி அளிப்பார்கள்.

கர்த்தருடைய கிருபையினால் ஒரிசாவில் 5 இடங்களில் ஜெபவீடு கட்டப்பட்டு வருகிறது. 2010 மே மாதம் 5ம் தேதி **கொண்டிக்குடா, லடுகான், மழிச்சலா**விலும், 6ம் தேதி **மீடியாக்கியா, குருத்தன்கோட்டிலும்** ஜெபவீடு பிரதிஷ்டை நடைபெற உள்ளது. தேவனுடைய நாமம் மகிமைப்பட ஜெபியுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில்,

ஸ்டீபன் கிறிஸ்டோபர்



# ஏசாயா 41 : 12 : உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்.

2010 ஏப்ரல் மாத வாக்குத்தத் தத்திற்காக ஆவலோடு காத்திருக்கும் அன்பான சகோதர, சகோதரிகளே!

இந்த மாதம் கர்த்தர் உங்களுக்கு தரும் வாக்குத்தத்தத்தம்:

**ஏசாயா 41:12**

**உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்.**

அன்பானவர்களே! நம் தேவன் வல்லமையுள்ள தேவன். அவர் உங்கள் எதிரிகளின் கைகளிலிருந்து உங்களை பாதுகாக்க விரும்புகிறார். ஒருவேளை நீங்கள் கடந்து செல்லும் சூழ்நிலைகள் மிகப் பெரிதாக தோன்றலாம். ஆனால் இந்த மாதம் கர்த்தரிடமிருந்து வரும் வாக்குத்தத்தம்:

**உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்.**

என்பதே. என்ன அற்புதமான வாக்குத்தத்தம்.

உங்கள் எதிரிகள் உங்கள் அயலகத்தாராகவோ, உடன் வேலை யாட்களாகவோ அல்லது நண்பர்களா கவோ இருக்கலாம். யாராயிருந்தாலும் கர்த்தர் இந்த மாதம் உங்களுக்கு மன அமைதியையும், பாதுகாவலையும் அளிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். நம் தேவன் கூறுகிறார்: **யாத்.23:17** “**நீ செல்லும் இடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரையும் கலங் கடித்து உன் சத்துருக்கள் எல்லா ரையும் முதுகு காட்டப் பண்ணுவேன்**” என்பதாக.

நம் தேவன் உங்கள் சத்துருக்கள் முதுகு காட்டி ஓடும் அளவுக்கு முன்கூட்டியே செயல் படுகிறார்.

**உபா.20:4** “உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம் பண்ணவும், உங்களை இரட்சிக்கவும் உங்களோடே கூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர்”.

நம் தேவன் உங்களுக்கு சமாதானமும் பாதுகாப்பான வாழ்க்கை யையும் தர வாஞ்சையுள்ளவராயி ருக்கிறார். ஒரு வேளை உங்கள் வாழ்க்கையில் அநேக சத்துருக்களை ஒன்றன்பின் ஒன்றாக அடிக்கடி சந்திக்க நேரிடலாம். ஆனால் தேவன் இந்த மாதம் உங்கள் சத்துருக் களின் பிடியிலிருந்து விடுவிக்க விரும்புகிறார்.

**உபாகமம் 12:10**ல் கூறிய படி “உங்களை சுற்றிலும் இருக்கிற உங்கள் சத்துருக்களை யெல்லாம் அவர் விலக்கி உங்களை இளைப்பாற பண்ணுகிறார்”.

**1சாமுவேல் 25:29**ல் கூறியபடி “உம்மைத் துன்பப்படுத்தவும் உம்முடைய பிராணனை வாங்கத் தேடவும் ஒரு மனுஷன் எழும்பினாலும் என் ஆண்டவனுடைய ஆத்துமா உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஆதரவில் இருக்கிறது. ஜீவனுள்ளோ ருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கும்; உம்முடைய சத்துருக்களின் ஆத்து மாக்களை கவணில் வைத்து எறிந்தாற்போல எறியப்பட்டுப் போம் ”.

**உபா.33:29**ல் கூறியபடி "உன் சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்; அவர்கள் மேடுகளை மிதிப்பாய்".

மேலும் நம் தேவன் உங்களை வாழ்க்கையில் உயரச் செய்ய விரும்பு கிறார். எந்த ஒரு சத்துருவையும் மிதித்துப் போடவும், உன் நாமத்தை பூமியின் பெரியோரின் நாமத்துக் கொத்த நாமத்தைத் தருவார்.

**1நாளா.17:8** ல் கூறுவது போல, "நீ போன இடமெல்லாம் உன்னோடே இருந்து உன் சத்துருக்களையெல்லாம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்கி பூமியி லிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த நாமத்தை உண்டாக்கினேன்".

இதை **சங்கீதம் 27:2**ல் வாசிக்கிறோம். "என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாத வர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க என்னை நெருக்குகையில் அவர்களே இடறி விழுந்தார்கள்".

மேலும் தேவன் உங்களோடி ருந்தால் உங்கள் சத்துருக்கள் மிதிப்பட்டுப் போவார்கள். சங்கீதக் காரன் இதை **சங்கீதம் 60:12**ல் கூறுகிறான்: "தேவனாலே பராக்கிரமம் செய்வோம். அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார்".

அதே போல் **சங்கீதம் 68:21**ல் "மெய்யாகவே தேவன் நம்முடைய சத்துருக்களின் சிரசையும், தன் அக்கிரமங்களால் துணிந்து நடக்கிறவ னுடைய மயிருள்ள உச்சந்தலையையும் உடைப்பார்" என்று வாசிக்கிறோம்.

தம்முடைய சத்துருக்களை பின்புறமாக அடித்து, அவர்களுக்கு நித்திய நிந்தையை வரப்பண்ணினார். **சங்கீதம் 78:66**ல் கூறியபடி உங்கள் சத்துருக்களுக்கு நித்திய நிந்தையை வரப் பண்ணுவார்.

மேலும், உங்கள் எதிரிகளை ஏழு வழியாக ஓட செய்வார். **உபா.28:7**ல் கூறுவது போல் "உன் சத்துருக்களை கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக் கொடுப்பார்; ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப் போவார்கள்".

நம் தேவன் இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற கீழ்கண்ட **ஏழு** காரியங் களை செய்யும்படி எதிர்பார்க்கிறார்:–

**1. கர்த்தருக்கு காத்திருக்க வேண்டும்.**

**2. உங்கள் வழிகளில் தேவனை திருப்திப்படுத்த வேண்டும்.**

**3. தேவசமூகத்தை நிறைவாக பெற வேண்டும்.**

**4. தேவனை நோக்கிப் பார்த்து, அவருடைய வழிநடத்துதலையும், உதவியையும் நாட வேண்டும்.**

**5. அவரை சேவிக்க ஆயத்தமா யிருக்க வேண்டும்.**

**6. உங்கள் கர்த்தராகிய தேவனுக்கு நன்றி கூறி ஆராதிக்க வேண்டும்.**

**7. உங்கள் எதிரிகளை நேசித்து அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.**

**முதலாவது:** நீங்கள் கர்த்தருக்காக காத்திருக்க வேண்டும். நீங்கள் கர்த்தருக்கு காத்திருக்கும்போது உங்கள் எதிரிகளை உங்கள் பாதபடி யாக்கிப் போடுவார். இதை **சங்.110:1**ல் வாசிக்கிறோம். "உம்முடைய சத்துருக் களை உமக்கு பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும்".

**இரண்டாவது:** நம்முடைய வழிகள் கர்த்தருக்கு பிரியமானதாக இருக்க வேண்டும். இப்படி செய்யும்போது, உங்கள் சத்துருக்கள் உங்களோடு சமாதானமாய் இருப்பார்கள்.

இதை **நீதி.16:7**ல் வாசிக்கிறோம். "ஒருவனு டைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதான மாகும் படி செய்வார்".

***மூன்றாவது:*** நீங்கள் தேவபிரசன்னத்தால் நிறைந்திருக்க வேண்டும். ஏனென்றால் உங்கள் சத்துரு அவருடைய சமுகத்தில் இடறி விழுவான். இதை **சங்.9:3**ல் வாசிக்கிறோம். "என் சத்துருக்கள் பின்னாக திரும்பும்போது உமது சமுகத்தில் அவர்கள் இடறுண்டு அழிந்து போவார்கள்".

***நான்காவது:*** நீங்கள் உதவிக்காக தேவனை நோக்கிக் கூப்பிடும்போது உங்கள் சத்துருக்களை சடுதியில் மண்துாளைப் போல் ஆக்கி விடுவார். இதை **ஏசாயா 29:5**ல் வாசிக்கிறோம். "உன் மேல் வருகிற அந்நியரின் திரள் பொடித்துாளத்தனையாகவும், பலவந்தரின் திரள் பறக்கும் பதர்களத்தனை யாகவும் இருக்கும்". மேலும் நமது ஆபத்துக் காலத்தில் நமது தேவனை அழைக்க வேண்டும். தேவன் உங்களோடிருக்கும்போது, உங்கள் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்.

இதை **சங்கீதம் 56:9**ல் "நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டு திரும்புவார்கள்; தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்".

***ஐந்தாவது:*** தேவன் எவ்வளவுக்கெவ்வளவு உங்கள் சத்துருக்களின் கையிலிருந்து விடுவிக்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு அவரை சேவிக்க முன் வர வேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவனை விட்டு பாகால்களையும் அஷ்டரோத்தையும் சேவித்தபோது தேவன் அவர்களைத் தண்டித்தார். அவர்கள் மனந்திரும்பி தேவனிடத்தில் மன்னிப்பு கேட்டனர்.

**1 சாமுவேல் 12:10**ல் "இப்போதும் எங்கள் சத்துருக்களின் கைக்கு எங்களை நீங்கலாக்கி ரட்சியும்; இனி உம்மை சேவிப்போம்" என்றார்கள்.

***ஆறாவது:*** நம் தேவனை ஆராதிக்க வேண்டும். ஏனென்றால் அவரே உங்களை விடுவிக்கிறவர். 2ராஜாக்கள் 17:39ல் வாசிப்பது போல் "உங்கள் தேவனாகிய கர்த்தருக்கே பயந்து நடப்பீர்களாக. அப்பொழுது அவர் உங்கள் எல்லா சத்துருக்களின் கைக்கும் உங்களை தப்புவிப்பார்" அவரை ஆராதிக்க வேண்டும்.

***ஏழாவது:*** நம் தேவன் உங்கள் சத்துருக்களை நேசிக்கவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணவும் வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். இதை மத்தேயு 5:44ல் வாசிக்கிறோம். "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்". இதே போல் **லுாக்கா 6:27**ல் வாசிக்கிறோம். **"உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்**".

***பக்தன் இப்படி பாடுகிறார்:***

**இன்று கண்ட எகிப்தியரை**<br>
**என்றுமே இனி காண்பதில்லை**<br>
**இஸ்ரவேலை காக்கும் தேவன்**<br>
**உறங்கவில்லை துாங்கவில்லை**

தொடர்ந்து பாடிக்கொண்டேயிருங்கள். உங்கள் விசுவாசத்தை இப்படி அறிக்கை செய்யுங்கள்.

என் சத்துருக்களை இனி நான் காணமாட்டேன். என் தேவன் எனக்கு சமாதானமும் பாதுகாப்பும் ஒவ்வொருநாளும் அளிப்பார்.

மகிமையும், கனமும் அவருடைய மகத்துவ நாமத்திற்கே உரித்தாகுக! தேவனைத் துதியுங்கள்.

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# கரூர் - தோகமலை யூனியன்
# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2010 ஏப்ரல் 26** திங்கள் காலை **9** மணி முதல் **ஏப்ரல் 30** வெள்ளி இரவு **10** மணி முடிய **கரூர் – தோகமலை யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2010 ஏப்ரல் 26** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2010 ஏப்ரல் 30** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2010 ஏப்ரல் 26 - 30 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**நல்லாயன் நற்செய்தி மன்றம்**
**கிறிஸ்டியன் பிரதரன் அசெம்பிளி**
**வடசேரி ரோடு**
**காவல்காரன்பட்டி - 621 313.**
**குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம்.**
**செல்: 94431 01320**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் பால் சடையன்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# வேலூர் - அரக்கோணம் யூனியன் 100-கிராம ஊழிய அறிக்கை

## நாள்: 15.02.2010 – 19.02.2010

கர்த்தருடைய கிருபையால் வேலூர் மாவட்டம் – அரக்கோணம் யூனியனில் 15.02.2010 முதல் 19.02.2010 வரை **"100 கிராம ஊழியம்"** ஆசீர்வாதமாக மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.






முதல் நாள் கடைசி நாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை அரக்கோணம் **பெத்தேல் கிறிஸ்டியன் அசெம்பிளி சபை போதகர்.** A.M.S.**ஜோசப்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ் நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 56 கிராம ஊழியர்கள் கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள். முதல்நாள் ஜெபத்தில் அரக்கோணம் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப் பட்டது. இதில் TVGM ஸ்தாபகர் **சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் தேவசெய்தி கொடுத்து, ஜெபத்தில் நடத்தி, ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். **காஞ்சிபுரம் பாஸ்டர் சாம்சன் காமராஜ் அவர்களும்** கலந்து கொண்டு ஜெபித்தார்கள்.





பின்பு கிராம ஊழியர்களை 12 குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியே தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபிக்க வைக்கப்பட்டனர். மதிய உணவிற்கு 12 குழுவினரும் கிராமங்களுக்குள் கடந்து சென்று, 5 நாட்கள் கிராமங்களில் தங்கியிருந்து வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், கைப்பிரதிகள், சிலுவைக்கொடிகள் கொடுத்து **இயேசுவே கர்த்தர்** என்று அறிவித்து ஊழியம் செய்தார்கள்.

 

ஊழியங்களை முடித்து மீண்டும் கிராம ஊழியர்கள் முன்பு கூடிய அதே இடத்தில் கூடி, ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக நடத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். மொத்தம் 12, 154 யோவான் சுவிசேஷப் புத்தகங்களும், 20,000 இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகளும், 10,000 சிலுவைக்கொடிகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த ஊழியத்தில் 160 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களைக் கொடுத்து வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோ. மாற்கு மாரியப்பன், செல்வராயன்பால், மகாராஜன், யோசுவா, வின்சென்ட்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் யாவரும் சுவிசேஷப் புத்தகங்களை ஆர்வமுடன் வாங்கினார்கள். நாங்கள் சொன்ன நற்செய்திகளையும் கேட்டார்கள். பலர் குடும்பத்திலுள்ள பிரச்சனைகள், வியாதிக்காக ஜெபிக்கச் சொன்னார்கள். **பரவஞ்சி** என்ற கிராமத்தில் புத்தகம் வாங்கியவர்களில் அநேகர் அதை கிழித்து எறிந்தார்கள். ஒருவர் மிகவும் கோபத்துடன் புத்தகத்தை வாங்கி கிழித்து எங்கள் முன் வீசினார். கர்த்தர் இவர்களை இரட்சிக்கும்படி ஜெபித்து வந்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள் 835 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2: சகோதரி விமலா, அன்னாள், ரூத் கலாவாணி, ரெபேக்காள்.**

நாங்கள் 10 கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம், கைப்பிரதி, சிலுவைக்கொடி கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். ஒரு சிலர் மட்டும் வாங்க மறுத்தனர். ஜெபிக்கும்படி கேட்ட அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தர் 950 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3: சகோதரி ரூத்மேரி, அன்னக்கிளி, ஜெபமணி, பிச்சையம்மாள், கிளமெண்ட்ஸ்மேரி.**

நாங்கள் சென்ற கிராமங்களில் யாவரும் சுவிசேஷப் புத்தகங்களை ஆவலுடன் வாங்கினார்கள். எந்தவித எதிர்ப்பும் இல்லை. மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 825 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரி செலின், கஸ்தூரி, மரியாள், கிருபா, அந்தோணிமேரி.**

நாங்கள் சென்ற **மேலேரி** என்ற கிராமத்தில் சில வாலிப பையன்கள் சேர்ந்து, இங்கு எந்த புத்தகமும் கொடுக்க கூடாது என்று சொல்லி, கொடுத்த புத்த கங்களையும் வாங்கி கிழித்துப் போட்டான்.

பின்பு நாங்கள் வேறு கிராமங்களுக்குச் சென்று வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 840 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5:சகோதரி ராணி சந்திரா, ஜோதிமணி,எஸ்தர், தேவபாக்கியம், லூயிஸ் அம்மாள்.**

எங்களுக்கு 13 கிராமங்கள் ஊழியம் செய்ய கொடுக்கப்பட்டிருந்தது. இக்கிராமங்களில் பெயரளவில் கிறிஸ்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இவர்களுக்கு இயேசுவின் இரட்சிப்பைக் குறித்தும், இயேசுவே மனுக்குலத்தை விடுவிக்கிறவர் என்றும் கூறினோம். இதைக் கேட்ட பலர் இனி நாங்கள் ஆலயத்துக்கு செல்வோம் என்று வாக்குக் கொடுத்தார்கள். நாங்கள் சந்தித்த கிறிஸ்தவ மக்கள் அம்பேத்கார் மற்றும் இந்து தெய்வங்களையும் வணங்குகிறவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபித்தோம். மொத்தம் 1250 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6:சகோதரி டோரா லாசர், அமிர்தம், ஷீலா, சாந்தி ஸ்டேன்லி, ரோணிக்கம்.**

தணிகைப்போளூர் ஊராட்சியிலுள்ள கிராமங்களுக்கு சென்று வீடுகள்தோறும் சுவிசேஷத்தை அறிவித்து, யோவான் புத்தகம் கொடுத்தோம். அப்போது சிலர் மேல்நாட்டு கடவுளை வணங்கச் சொல்லுகிறீர்களே, எங்களுக்கு அநேக கடவுள்கள் இருக்கிறார்கள், இந்த கடவுள்களையெல்லாம் வணங்கியும் படாதபாடு படுகிறோம் என்றார்கள். இவர்களுக்கு **இயேசுவே சமாதானம் தருகிறவர்** என்று கூறினோம். அப்போது ஒருவர் உங்களை அடித்து குழி தோண்டி புதைத்து விடுவோம், அப்போது உங்கள் இயேசு என்ன செய்வார், மரியாதையாக போய் விடுங்கள் என்று சொன்னார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள் 810 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7:சகோ.சிவக்குமார், பால்ராஜ், ஜோசப் தார்சிஸ், அன்பு, ஜோசப் முரளிதரன்,**

நாங்கள் வளர்புரம் என்ற கிராமத்திற்கு போக பஸ்ஸில் ஏறியிருந்தோம். எங்கள் குழுவில் உள்ளவர் நாம் வளர்புரம் போகிறோம். நாம் அங்கு போன பிறகு அது கிறிஸ்துவின் வளர்புறமாக மாறணும் என்றார். இதை பஸ்ஸில் இருந்த ஒருவர் கேட்டு, அங்குள்ள மக்களை மாற்ற முடியாது, அவர்கள் R.S.S.காரர்கள், உங்களை அடித்து உதைப்பார்கள் என்றார். நாங்கள் பரவாயில்லை, நாங்கள் எங்கள் இயேசுவுக்காக மரிக்கவும் ஆயத்தமாக இருக்கிறோம் என்றோம். கர்த்தருடைய கிருபையால் இங்குள்ள 7 கிராமங்களிலும் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்து இயேசுவே மெய்யான கடவுள் என்பதை தெரிவித்தோம். அநேகர் இருதயத்தில் ஏற்றுக் கொண்டார்கள். சுமார் 7 பேர் நாங்கள் வரும் ஞாயிற்றுக் கிழமை இயேசு சபைக்கு வருகிறோம் என்றார்கள். மொத்தம் 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 820 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8:சகோ.செல்வராஜ்,எபிநேசர், அந்தோணி,சக்தியன், சாமுவேல் மாசிலாமணி**

நாங்கள் கிராமங்களில் ஊழியம் செய்து வரும்போது பெரியவர்கள், தாய்மார்கள், வியாதியாயிருந்தவர்களுக்காக ஜெபித்தோம். அநேகர் நாங்கள் வந்து ஜெபித்தது நல்லது என்று சொல்லி எங்களுக்கு நன்றி கூறினார்கள். மொத்தம் 964 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9: சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், ஞானசெல்வி, சலோமி சம்மனசு.**

நாங்கள் 8 கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சுவிசேஷம் அறிவித்தோம். கடம்பநல்லூர் கிராமத்தில் கிருஷ்ணசாமியார் என்பவர் தலையில் பெரிய கொண்டை போட்டுக் கொண்டு, அவர் வீட்டில் உட்கார்ந்து இருந்தார். இவரிடம் யோவான் புத்தகம் கொடுத்து,இயேசு உங்களை நேசிக்கிறார் என்று சொன்னபோது அவர் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10:சகோதரி மரியம்மாள், கிரேஸ் பத்மா, தேபோராள், அபியேல் அந்தோணியம்மாள்.**

நாங்கள் புதுப்பேட்டை பகுதியில் ஊழியம் செய்து வரும்போது, ஒரு பெண்ணிடம் யோவான் புத்தகம் கொடுத்து படியுங்கள் என்று சொன்ன போது, அவள் நாங்கள் இந்துக்கள், எங்கள் புத்தகங்களை கொடுத்தால் நீங்கள் வாங்குவீர்களா ? என்று கேட்டாள். நாங்கள் உங்களிடம் எவ்வளவு புத்தகம் இருக்கிறது, கொடுங்கள் நாங்கள் வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்ன போது சிரித்துக் கொண்டே புத்தகத்தை வாங்கி சென்றாள். அநேக மக்கள் தங்களுக்காக ஜெபிக்கக் கேட்டார்கள். அவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 825 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11:சகோ.சூசைமாணிக்கம், பீட்டர் ராமலிங்கம்,ஜெபமலைநாதன், தாவீது தங்கவேல்.**

அம்மனூர் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுகள் தோறும் புத்தகம் கொடுத்தபோது, ஒரு வீட்டில் ஒரு வாரமாக காய்ச்சலாக இருந்த ஒரு பெண்ணுக்காக ஜெபித்தோம். கர்த்தர் சுகம் கொடுத்தார். ஒரு இந்து சகோதரி எங்கள் ஊழியத்திற்கு அதிகமாக எதிர்ப்பு தெரிவித்தாள். அம்மனூரில் சுவிசேஷப் புத்தகம் கொடுக்கக்கூடாது என்று, எங்களை போய்விடுங்கள் என்று விரட்டி னார்கள். மேட்டுநகரில் ஒரு தம்பதியருக்கு 5 ஆண்டுகளாக குழந்தை இல்லை என்று ஜெபிக்கச் சொன்னார்கள். ஜெபித்தோம். மொத்தம் 650 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12:சகோ.பிரேம் ஆனந்த், பாபு சாலமோன்,நோவா, கண்ணன், அருண்ராஜ்.**

சிறுணமல்லி, புதுமல்லி, புதேரி, ஒச்சலம் ஆகிய கிராமங்களில் மக்கள் ஆர்வத்துடன் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கினார்கள். **நாகவேடு** கிராமத்தில் ஒரு வாலிபன் போடா எதுவும் கொடுக் காதே என்று கோபமாக விரட்டினான். நாங்கள் அமைதியாக வந்து விட்டோம். கீழாந்துரை கிராமத்தில் ஒருவர் இயேசுதான் மெய் தெய்வம் என்றால் எங்கள் தெய்வ மெல்லாம் யார் ? ஏன் இப்படி வீடு வீடாக சென்று வற்புறுத்தி கொடுக்கிறீர்கள் என்றவருக்கு வாங்கு வதற்கு விரும்பாவிட்டால் நாங்கள் கொடுப்பதில்லை என்று கடந்து சென்றோம். தொண்டையில் கேன்சர் வந்து ஆப்பரேஷன் செய்து படுக்கையில் இருந்தவருக்கு ஆறுதல் கூறி, சுகம் பெற ஜெபித்தோம். மொத்தம் 1250 சுவிசேஷப் புத்தகங்கள், 995 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை !**

**ஜெபித்த யாவருக்கு நன்றி !**

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் - மூலம் வந்த சாட்சி கடிதங்கள்

**சகோதரி கலா ராஜேந்திரன்**

எனது மகன் அஜித் டிசம்பர் 27ம் தேதி டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தான். அப்போது TVGM அறிமுகப்பணி அலுவலக சகோதரி ICUவில் வந்து ஜெபித்துவிட்டுச் சென்றார்கள். நானும் தேவன் என் மகனுக்கு நல்ல சுகத்தைக் கொடுத்தால் **"100–கிராம ஊழியம்"** பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை செய்தேன். சகோதரி ஜெபித்துவிட்டு சென்றவுடனே மகனுக்கு தேவன் நல்ல சுகத்தைக் கொடுத்தார். 31ம் தேதி மருத்துமனையிலிருந்து வீடு வந்தோம். அற்புதம் செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**சகோதரி லதா**

என் தம்பிக்கு மருத்துவ சான்றிதழ் எடுப்பதற்கு 3 மாதமாக முயற்சித்தும் கிடைக்காமல் இருந்தது. **"100–கிராம ஊழியம்"** பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை செய்து ஜெபித்த அதே நாளிலே சான்றிதழை வாங்குவதற்கான வழியை ஒரு நபர் மூலமாக அறிய கர்த்தர் கிருபை செய்தார். சான்றிதழ் கிடைத்து விட்டது.

**சகோதரி சுசிலா**

எனது மகள் கர்ப்பம் தரித்த 4 வது மாதத்தில் கர்ப்பம் கலைந்தது போல சொப்பனம் கண்டு கலங்கியிருந்த நாளில் **"100–கிராம ஊழியம்"** பத்திரிக்கையில் **"கர்த்தர் நிச்சயமாய் தப்புவிப்பார்"** என்ற வாக்குத்தத்த வசனம் வந்தது. விசுவாசித்து ஜெபம் பண்ணினேன். கர்த்தர் சுகமான பிரசவத்தைக் கட்டளையிட்டார்.

## 2010 பிப்ரவரி மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பிப்ரவரி மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றது. எல்லா மாதங்களையும் விட ஊழிய நாட்கள் குறைவாக இருந்தாலும் எல்லாப் பகுதிகளையும் சந்தித்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார்.

சுவிசேஷ ஊழியம் செய்கிறவர்கள் தொடர்ச்சியாக செய்ய முடியாதபடி தடைகள் ஏற்படுகிறது. கர்த்தர் தடைகளை மாற்றும்படியாக ஜெபியுங்கள்.

நடத்தப்பட்ட வீட்டுக்கூட்டங்கள், திறந்தவெளி ஜெபக்கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வாதமாக நடத்தித் தந்தார். தேவனுக்கே மகிமை

**அறிமுகப்பணி அலுவலகத்திற்கு ஆட்கள் தேவை!**
கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவர்களுடைய வீடுகளுக்கு இரண்டு இரண்டுபேராக சென்று ஜெபித்து, கிராம ஊழிய வளர்ச்சிக்காக உண்டியல் மற்றும் காணிக்கைகளை சேகரித்து, TVGM சார்பில் ரசீது கொடுத்து அவர்கள் தேவைகளுக்காக ஜெபித்து, ஆசீர்வதித்து வர பெண்கள் தேவை.

கிறிஸ்துவின் பணியில்,
N.ஷோபனா இவான்ஜலின்.
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001
செல்: **98658 26424**
போன் : **04652 - 277251**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

### பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

**சகோதரி ராணி, கன்னியாகுமரி.**

நான் தனியார் கல்லூரியில் பயின்று வருகிறேன். கடந்த மாதம் நடந்த செமஸ்டர் தேர்வில் வெற்றி பெற்றால் "100–கிராம ஊழியம்" பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அனைத்து பாடங்களிலும் வெற்றியைத் தந்தார்.

**சகோதரி மல்லிகாசாமி, நெல்லை.**

தங்களிடம் ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் எழுதிய கடிதம் மனதிற்கு ஆறுதலை தந்தது. கர்த்தர் ஜெபத்தின் மூலம் பணம் கிடைக்க கிருபை செய்தார்.

**சகோதரி சோபியா, ஜெயங்கொண்டம்.**

என் தம்பி B.Th. முடித்துவிட்டு M.Div. படிக்க மாதம் ரூ.1000/– பீஸ் கட்ட வேண்டுமென கூறினான். நான் 2008 டிசம்பர் 31ம் தேதி மாலை தம்பிக்கு உதவி செய்யக் கூடிய யாரைவது எழுப்பி தரும் படி கர்த்தரிடம் ஜெபித்தேன். அன்று இரவே கர்த்தர் சகோ.P.T. கிறிஸ்டோபர் மூலம் தம்பிக்கு உதவி கிடைக்க செய்தார். இப்பொழுது Graduation ல் படிப்பில் First என Award வாங்க கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை.

**பெயர் வெளியிட விரும்பாத சகோதரர்.**

என் உடன்பிறவா சகோதரியின் திருமணம் நடந்த அன்று இரவே குடும்ப உறவில் சரியில்லாமல் குழப்பம் ஏற்பட்டது. நான் "100–கிராம ஊழியம்" மாதஇதழை வாசிப்பவன். சாட்சி எழுதுவதாக 3 மாதம் கண்ணீரோடு ஜெபித்து வந்தேன். அவர்கள் ஒரு மனமாக இருக்கவும், சகோதரி கருத்தருக்கவும் கர்த்தர் உதவி செய்தார்.

**சகோதரி விஜி, தஞ்சாவூர்.**

என் சகோதரிக்கு திருமணம் நடைபெறாமல் தடையாக காணப்பட்டது. தங்களுக்கு ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு திருமணம் நடைபெற கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை.

**சகோதரி சுகந்தி, திண்டுக்கல்.**

என் கணவருக்காக ஜெபிக்கும்படி கேட்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு குடியிலிருந்தும், விக்கிரக ஆராதனையிலிருந்தும் விடுபட கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை.

**2010 ஏப்ரல் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : விருதுநகர்
யூனியன் : ராஜபாளையம்
நாள் : 10.04.2010
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் U.A. ஆபிரகாம்**
**சாலேம் அசெம்பிளி**
**வடக்கு மலையடிப்பட்டி**
**ஆணைக்கல் - பின்புறம்**
**மதுரை ரோடு**
**ராஜபாளையம் - 626 117.**
**விருதுநகர் மாவட்டம்.**
செல்: 94864 88546
99432 81640

**கிராமங்களில் சபை போதகர்கள் விசுவாசத்தினால் கட்டி வரும் ஜெபவீட்டை TVGM பொறுப்பாளர்கள் 2010ல் பார்வையிடுதல்**



உப்புலாபுரம் – தருமபுரி



சமுசிகாபுரம் – இராஜபாளையம்



சத்திரப்பட்டி – திண்டுக்கல்



வேடசந்துார் – திண்டுக்கல்



வேடப்பட்டி – திண்டுக்கல்



கன்னிவாடி– திண்டுக்கல்



சிறுவாச்சூர் – பெரம்பலுார்



பஞ்சப்பூர் – திருச்சி

**மேற்கண்ட ஜெபவீடுகள் கட்டி முடிக்கப்படுவதற்கு கர்த்தர் கிருபை செய்ய ஜெபியுங்கள்**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** TASOL என்ற நமது THE AMBASSADOR SCHOOL OF LEARNING Trust ஐ பதிவு செய்ய கிருபை அளித்த தேவாதி தேவனைத் துதியுங்கள்.

பேருதவியாக இருந்த CIM திரு. ஜெயக்குமார், அட்வகேட் பிரேம்குமார், ஆடிட்டர் ஜான் ராஜசேகரன் ஆகிய மூவரையும் தேவன் விசேஷமாக ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

TASOL ஐ குறித்த தரிசனத்தையும், Trust முழு அமைப்பையும் இரவு, பகலாக எழுதி தெளிவான முடிவுக்கு கொண்டு வந்த நம்முடைய சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபருக்காக, தேவன் அவருக்கு கொடுத்த ஞானத்திற்காகவும் தேவனைத் துதியுங்கள்.

**செவ்வாய்:** அநேகருடைய ஜெபத்தினால் TASOL Trust க்கு நாம் அட்வான்ஸ் கொடுத்திருந்த நிலங்களில் மூன்றிலொரு பகுதியை பதிவு செய்ய கிருபை செய்த தேவனைத் துதியுங்கள்.

**புதன்:** 2010ம் ஆண்டில் மூன்று இடங்களில் தரிசன முகாம் நடத்தவும், 4 ஜெபவீடுகள் மார்ச் மாதத்தில் பிரதிஷ்டை செய்யவும், 8 கிராமங்களில் மற்ற ஊழியங்கள் விசுவாசத்தினால் கட்டி வரும் ஜெபவீட்டை பார்வையிடவும், ஜெபிக்கவும் கிருபை செய்த தேவனைத் துதியுங்கள்.

**வியாழன்:** 2010ம் ஆண்டில் சகோ. P.T.கிறிஸ்டோபரை தங்கள் சபையில் தேவசெய்தியளிக்க வாய்ப்புக் கொடுத்த ஒவ்வொரு தேவஊழியர்களுக்காக துதியுங்கள்.

**வெள்ளி:** TVGM ஏலீம் சிறுவர் இல்லம் கட்டிடத்தில் சமையலறை, குளியலறை, கழிவறை, வாசகசாலை ஸ்டோர் ரூம் மற்றும் பிள்ளைகளுக்கு தங்க, படிக்க கூடுதல் அறைகள் கட்டும்படியாக அரசாங்க சமூக நலத் துறை அதிகாரிகள் நமக்கு கட்டளை யிட்டுள்ளார்கள். இதற்கு நமக்கு பெரும் தொகை தேவைப்படுகிறது. கர்த்தர் தாமே பரத்திலிருந்து கட்டளையிடும்படியாக ஜெபியுங்கள்.

**சனி:** கிராமங்களில் புதிதாக ஆலயங்கள் கட்டித் தரும்படியாகவும், அறைகுறையாக உள்ள கட்டிடங்களை முடித்து தரும்படியாகவும் உத்தேசமாக 70 கிராம ஊழியர்கள் TVGMக்கு விண்ணப் பித்துள்ளார்கள்.

ஆனால் அதை கட்டிக் கொடுக்க முன் வருபவர்கள் மாதத்திற்கு அதிக பட்சம் 2 பேர் மட்டுமே. அதிலும் முழுமையாக அல்ல, 50 சதவீதம் மட்டுமே. ஆதலால் உண்மையான தேவையுள்ள அநேக கிராம ஊழியர் களின் தேவைகள் சந்திக்கப்படவில்லை. அநேக கிராம ஊழியர்கள் ஜெபவீட்டிற்கு கதவு, ஜன்னல், கழிவறை, மின்சாரம் வைக்க முடியாமல் பல ஆண்டுகளாக தவிக்கிறார்கள். கர்த்தரே புதிய புதிய வாசல்களை திறக்க ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** மார்ச் 31 கணக்கை ஆடிட் செய்து, அரசாங்க அதிகாரிகளுக்கு கணக்கு ஒப்புவிக்கும்போது கடன் இல்லாமல் முடிவடைய கருத்தாய் ஜெபியுங்கள். ஜெபிக்கிற, கொடுக்கிற ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

# TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய். ஏசாயா 41:12

## நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை

**நாள் :** **31.03.2010** புதன்
**நேரம் :** 7PM முதல் 12Mid Night
**இராப்போஜனம் :** இரவு 12மணி

**நாள் :** **01.04.2010** வியாழன்
**துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM
**வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM

**இடம்:** **TVGM தலைமை அலுவலகம்,**
**100 – கிராமம்,**
**திருச்சி – 620 102.**




**28.02.2010** ஞாயிறு அன்று நடைபெற்ற நடுஇரவு ஜெபத்தில் பாஸ்டர் A.S.ஸ்டீபன் அவர்கள் திருவிருந்து ஆராதனையை நடத்தினார்கள்.

## TVGM குறுகிய கால சீஷத்துவ வேதாகம பயிற்சி

**2010** ஏப்ரல் 25 முதல் மே 31 முடிய, திருச்சி – சோமரசம்பேட்டையில் கடிதத் தொடர்பு ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்ட புறமத நண்பர்கள் இருபாலருக்கும் வேதாகம வகுப்புகள் நடத்தப்படும்.

தங்குமிடம், உணவு, படிப்பு இலவசம். ஒழுங்கும் கிரமுமாக வேதபாடம் கற்றவர்களுக்கு 2010 மே 31 ம் தேதி சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவம் பெற ரூ 10 மட்டும் TVGM தலைமை அலுவலகத்திற்கு ( உங்கள் முகவரியுடன்) அனுப்பி வையுங்கள்.**

உங்கள் சபை போதகரின் சிபாரிசு கடிதத்தையும், இணைத்து அனுப்புங்கள்.

**வயது, படிப்பு கவனிக்கப்படுவதில்லை.**

**Form IV** Statement about ownership and other particulars about newspaper

**"HUNDRED VILLAGE MINISTRY"** to be published in the first issue of every year after last day of February.

**1. Place of Publication :** Somarasampettai
**2. Periodicity of its Publication :** Monthly
**3. Printer's Name :** Mr. Stephen Christopher **Nationality :** Indian
**Address :** T.V.G.M Publication Printers, C/o T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.
**4. Publisher's Name :** Mr. Stephen Christopher **Nationality :** Indian
**Address :** T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.
**5. Editor's Name :** Mr. Stephen Christopher **Nationality :** Indian
**Address :** T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.
**6. Names and addresses of individuals :** No T.V.G.M. Publication Trust

I, Stephen Christopher hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sd
**Date: 13.03.2010** **Signature of Publisher**

**நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச்**
**சுவிசேஷமாய் அறிவியுங்கள்.** சங்.96:2

## TVGM 100கிராம ஊழிய தரிசன முகாம்

**இடம் :** ஸ்டெல்லா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி
**புதிய வளாகம்**, ஜான்ஸ் நகர்,
**அஞ்சுகிராமம்**, கன்னியாகுமரி மாவட்டம்.
**நாள் : 2010** ஏப்ரல் **14** புதன்கிழமை
**நேரம் :** காலை 9 மணி முதல் மதியம் 2 மணி முடிய

**தரிசனசெய்தி**

**சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், C.E.O**
**சகோ. P.T. கிறிஸ்டோபர், ஸ்தாபகர்**

100–கிராம ஊழியர்கள் மற்றும் முழுநேர ஊழியர்கள் சாட்சிகள் இடம் பெறும்.

**யாவரும் கலந்து கொண்டு தேவஆசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறோம்.**

**தொடர்பு முகவரி :** TVGM ஒருங்கிணைப்பாளர்
நாகர்கோவில்.
போன் : **04652 - 277251** செல்: **98658 26424**

**அனுமதி இலவசம் ! மதிய உணவு வழங்கப்படும்.**

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

TVGM தலைமை அலுவலக முகவரி

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-


MR.STEPHEN CHRISTOPHER,
MANAGING DIRECTOR.
TAMIL VILLAGE GOSPEL MISSION
"100 - VILLAGE"
SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL Bro.Stephen : 94871 92763
Bro.P.T Christopher : 94435 44628
Email : 100village@tvgm.org


*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம்,
'**100 கிராம ஊழியம்**' அறிக்கை,
மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள்
வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும்
தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும்
TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள்
Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு
டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
T.V.G.M. SOCIAL SERVICE ( 80G வரிவிலக்கு உண்டு )
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

( அல்லது )

MR. STEPHEN CHRISTOPHER,
SB A/c No:12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.
இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

**Return Requested**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

# THE AMBASSADOR SCHOOL OF LEARNING -

ஸ்தாபனத்திற்கு விலைக்கு வாங்க, **அட்வான்ஸ்** கொடுத்திருக்கும் நிலத்தில் 21.02.2010 அன்று **சகோ. ஜெப், சகோதரி ஜூன்** ஜெபித்தார்கள்.

அத்துடன் **01.03.2010** அன்று மேற்கண்ட பெயரை TVGM **New Church** ல் தேவனுடைய நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்தார்கள்.






REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

**ஜெப பங்காளர்கள், நன்கொடையாளர்கள் தேவை!**

**THE AMBASSADOR SCHOOL OF LEARNING**
**நிலத்தின் விலை - ரூ. 15 லட்சம் ( பகுதி I )**

**ஒரு பிளாட் விலை - ரூ. 10,000/-**
**135 பங்காளர்கள் தேவை.**

**கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால், கிறிஸ்தவ தலைமைத்துவ மையம் அமைக்க, நிலம் வாங்கும் இந்த உன்னத தரிசனத்தில் நீங்களும் ஒரு பங்காளராக அல்லது பல பங்காளர்களை அறிமுகப்படுத்தும் முக்கியஸ்தராக மாறலாமே?**